

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட பிற்படுத்தபட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (27.06.2016) வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ்.இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 402/2016 நாள்: 27.06.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், 12 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை இன்று (27.06.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (27.06.2016) நடைபெற்றது.

திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக 10 பயனாளிகளுக்கு தலா ரூ.3,386/- மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும், 2 பயனாளிகளுக்கு தலா ரூ. 4,560/- மதிப்பிலான விலையில்லா சலவை பெட்டிகள் என மொத்தம் 12 பயனாளிகளுக்கு ரூ. 42,980/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (27.06.2016) நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ்.இளங்கோ, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. தி. சுப்பையா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு. பி.வி. சரவணன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.